ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

## ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை




# சாற்றுமுறை

**ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி தனியன்**

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா |
தஸ்ய தாஶரதே: பாதௌ ஶிரஸா தாரயாம்யஹம் ||

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வாநாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை

**வர்தமான ஸ்வாமி ஸ்ரீ உ.வே.கோ.க.வா.அ.**
**குமார ராமாநுஜாசார்யர்**



## வர்த்தமான ஸ்வாமி தனியன்

ஸ்ரீமத் வதூல குல வாரிதி பூர்ண சந்த்ரம்
வாதூல வேங்கட குரூத்தம புத்ர ரத்நம் |
ஸ்ரீஸைல தேஶிக க்ருபாப்த ஸமஸ்த போதம்
ராமாநுஜார்ய குருவர்ய மஹம் ப்ரபத்யே ||

ஸ்ரீவேங்கடார்ய தநயம் தத்பாத கமலாஶ்ரயம் |
வாதூலாந்வய பூர்ணேந்தும் ராமாநுஜ குரும் பஜே ||

| | |
|---|---|
| **Swami Mudaliandan Thirumaligai**<br>4/345, Sannadhi Street,<br>**Singaperumal Koil**,<br>Chenglpet District,<br>Tamil Nadu, India. PIN 603 204 | **Swami Mudaliandan Thirumaligai**<br>73, East Chithra St,<br>**Srirangam**, Trichy,<br>Tamil Nadu, India. PIN 620 006 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>51, Sannadhi Street,<br>**Kancheepuram**,<br>Tamil Nadu, India. Pin 631 501 | **Swami Mudaliandan Thirumaligai**<br>**Thirunarayanapuram**,<br>Karnataka, India. PIN 571 431 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>Next to Theerthavaari Mandapam,<br>Vaazhai Kulam Street,<br>**Srivilliputhur**,<br>Tamil Nadu, India. PIN 626 125 | **Swami Mudaliandan Thirumaligai**<br>Sannadhi Street,<br>**Kooram**10 KM from Kancheepuram,<br>Tamil Nadu, India. PIN 631 558 |

**E Mail:** sridasarathy@gmail.com, acharya@mudaliandan.com
**Website:** www.mudaliandan.com
**Phone:** 91711 12050 , 96294 18994

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:  ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம:  ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம:  ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

# சாற்றுமுறை

‡ சிற்றஞ் சிறு காலே * வந்துன்னைச் சேவித்து * உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் *
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து * நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது **
இற்றைப் பறை கொள்வான் * அன்று காண் கோவிந்தா! *
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் * உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் *
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்

‡ வங்கக் கடல் கடைந்த * மாதவனைக் கேசவனைத் *
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி *
அங்கு அப்பறை கொண்டவாற்றை * அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன **
சங்கத் தமிழ் மாலை * முப்பதும் தப்பாமே *
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள் *
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் *
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்

‡ நல்லை நெஞ்சே ! நாம் தொழுதும் * நம்முடை நம்பெருமான் *
அல்லிமாதர் புல்க நின்ற * ஆயிரம் தோளனிடம் **
நெல்லி மல்கிக் கல்லுடைப்பப் * புல் இலையார்த்து* அதர்வாய்ச்
சில்லு சில்லென்றொல்லறாத * சிங்கவேள் குன்றமே

‡ செங்கண் ஆளி இட்டிறைஞ்சும் * சிங்கவேள் குன்றுடைய *
எங்களீசன் எம்பிரானை * இருந்தமிழ் நூற் புலவன் *

மங்கை யாளன் மன்னு தொல்சீர் * வண்டறை தார்க் கலியன் *
செங்கையாளன் செஞ்சொல் மாலை * வல்லவர் தீதிலரே

‡ தடவைரவாய் மிளிர்ந்துமின்னும் * தவளநெடுங்கொடிப் போல்*
சுடெராளியாய் நெஞ்சினுள்ளே * தோன்றும் என் சோதி நம்பி **
வடதடமும் வைகுந்தமும் * மதிள் துவராபதியும் *
இடவகைகள் இகழ்ந்திட்டு * என் பால் இடவகை கொணடனையே

‡ வேயர் தங்கள் குலத்துதித்த * விட்டுசித்தன் மனத்தே *
கோயில் கொண்ட கோவலனைக் * கொழுங்குளிர் முகில் வண்ணென **
ஆயரேற்றை அமரர் கோவை * அந்தணர் தம் அமுதத்தினை *
சாயை போலப் பாட வல்லார் தாமும் * அணுக்கர்களே

‡ ஆலமா மரத்தினிலை மேல் * ஒரு பாலகனாய் *
ஞாலமேழும் உண்டான் * அரங்கத்தரவினணையான் **
கோலமாமணி யாரமும் * முத்துத் தாமமும் முடிவில்லதோரெழில் *
நீலமேனி ஐயோ! நிறை கொண்டது என் நெஞ்சினையே

‡ கொண்டல் வண்ணனைக் * கோவலனாய் வெண்ணெயுண்ட
வாயன் * என்னுள்ளம் கவர்ந்தானை **
அண்டர்கோன் அணியரங்கன் * என் அமுதினைக்
கண்ட கண்கள் * மற்றொன்றினைக் காணாவே

‡ சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த * முடிவில் பெரும்பாழேயோ *
சூழ்ந்ததனில் பெரிய * பரநன் மலர்ச் சோதீயோ **
சூழ்ந்ததனில் பெரிய * சுடர்ஞான வின்பமேயோ! *
சூழ்ந்ததனில் பெரிய * என்னவாவறச் சூழ்ந்தாயே!

‡ அவாவறச்சூழ் * அரியை அயனை அரனை அலற்றி *
அவாவற்று வீடுபெற்ற * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
அவாவில் அந்தாதிகளால் * இவையாயிரமும் * முடிந்த
அவாவில் அந்தாதி இப்பத்தறிந்தார் * பிறந்தார் உயர்ந்தே

‡ இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலயென்னும்
பொருப்பிடம் * மாயனுக்கென்பர் நல்லோர் ** அவை தம்மொடும்
வந்து இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து * இன்று அவன்
வந்து இருப்பிடம் * என்தனிதயத்துள்ளே தனக்க்கின்புறவே

‡ இன்புற்ற சீலத்திராமானுச! * என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோய் * உடல் தோறும் பிறந்திறந்து ** எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவதொன்றுண்டு * உன்
தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும் படி* என்னையாக்கி
அங்காட்படுத்தே

‡ அங்கயல்பாய் வயல் தென்னரங்கன் * அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப் * பாவையைப் போற்றுதும் ** பத்தியெல்லாம்
தங்கிய தென்னத்தழைத்து நெஞ்சே! நம்தலை மிசையே *
பொங்கிய கீர்த்தி * இராமானுசனடிப் பூமன்னவே

பூ மன்னு மாது பொருந்தியமார்பன் * புகழ்மலிந்த
பாமன்னு மாறன் * அடி பணிந்துய்ந்தவன் ** பல்கலையோர்
தாம் மன்ன வந்த இராமானுசன் * சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ * நெஞ்சே! சொல்லுவோம் அவன் நாமங்களே

ஆழ்வார்கள் வாழி * அருளிச்செயல் வாழி *
    தாழ்வாதுமில்குரவர் தாம் வாழி * எழ்பாரும்
உய்ய * அவர்கள் உரைத்தவர்கள் தாம் வாழி *
    செய்யமறை தன்னுடனே சேர்ந்து *

‡ பூருவாசாரியர்கள் * போதமனுட்டானங்கள் *
    கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர்தேறி **
இருள் தருமா ஞாலத்தே * யின்பமுற்று வாழும் *
    தெருள்தருமா தேசிகனைச் சேர்ந்து

‡ இந்தவுபதேச ரத்தினமாலை தன்னை *
    சிந்தை தன்னில் நாளும் சிந்திப்பார் ** எந்தை

எதிராசர் * யின்னருளுக்கெண்டுமிலக்காகி *
சதிராக வாழ்ந்திடுவர் தாம்

**எறும்பியப்பா அருளிச்செய்தது**

மன்னுயிர்காளிங்கே மணவாள மாமுனிவன் *
பொன்னடியாஞ் செங் கமலப் போதுகளை உன்னிச் *
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மை *
கரத்தாலே தீண்டல் கடன்

கற்பூர நீராஜனம் முடிந்த பின்னர், பூக்கள் மற்றும் திருத்துழாய் கொழுந்தை ஆழ்வார் ஆசார்யர்களுக்கு, “அருளப்பாடு நம்மாழ்வார், அருளப்பாடு எம்பெருமானார், அருளப்பாடு மணவாள மாமுனிகள்” என்று விண்ணப்பித்து ஸமர்ப்பிக்கவேண்டும். அனைத்து ஆழ்வார்/ ஆசார்யர்களுக்கும் இதே போல் அருளப்பாடு (ஆழ்வார்/ ஆசார்யன் பெயர்) என்று புஷ்பம், திருத்துழாய் ஸமர்ப்பிக்கவேண்டும். பிறகு கீழ்கண்ட பாசுரங்களை அநுஸந்திக்க வேண்டும்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடி நூறாயிரம் ** மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா*
உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும் * பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு*
வடிவாய் நின்வல மார்பினில் * வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
** வடிவார் சோதி வலத்துறையும் * சுடராழியும் பல்லாண்டு *
படைபோர் புக்கு முழங்கும் * ப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

**பெரிய ஜீயர் அருளிச்செய்தது**

ஸர்வதேஶ தஶாகாலே ஷ்வ்யாஹத பராக்ரமா |

ராமாநுஜார்ய திவ்யாஞ்ஞா வர்த்ததாம் பிவர்ததாம் ||

**கந்தாடையண்ணன் அருளிச்செய்தது**

ராமாநுஜார்ய திவ்யாஞ்ஞா ப்ரதிவாஸர முஜ்ஜ்வலா |
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ ||

**எம்பெருமானார் அருளிச்செய்தது**

ஸ்ரீமந்! ஸ்ரீரங்க ச்ரியமனுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய |
ஸ்ரீமந்! ஸ்ரீரங்க ச்ரியமநுபத்ரவாமனுதிநம் ஸம்வர்த்தய ||

**பெரிய ஜீயர் அருளிச்செய்தது**

நம: ஸ்ரீசைல நாதாய குந்தீ நகர ஜந்மேந |
ப்ரஸாதலப்த பரம ப்ராப்ய கைங்கர்ய ஸாலிநே ||

**நம்பெருமாள் அருளிச்செய்தது**

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||

**மடத்துப் பிள்ளை அருளிச்செய்தது**

வாழி திருவாய்மொழிப் பிள்ளை * மாதகவால்
வாழும்* மணவாள மாமுனிவன் – வாழியவன் *
மாறன் திருவாய்மொழிப்பொருளை * மாநிலத்தோர்
தேறும்படியுரைக்குஞ் சீர்

**ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச்செய்தது**

செய்ய தாமரைத் தாளிணை வாழியே *
சேலை வாழி திருநாபி வாழியே *
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே *
சுந்தரத் திருத் தோளிணை வாழியே *
கையுமேந்திய முக்கோலும் வாழியே *
கருணை பொங்கிய கண்ணிணை வாழியே *
பொய்யிலாத மணவாள மாமுனி *
புந்தி வாழி புகழ் வாழி வாழியே *

அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ *
சடகோபன் தண்டமிழ் நூல் வாழ * கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ * மணவாள மாமுனியே *
இன்னும் ஒரு நூற்றாண்டிரும்

**ஆண்டாள்**

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர் *
    சோதி மணிமாடந் தோன்றுமூர் *
நீதியால் நல்லபத்தர் வாழுமூர் *
    நான் மறைகளோதுமூர் வில்லிப்புதூர் வேதக்கோனூர் **
பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும் *
    வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமழ் *
ஐயைந்துமைந்தும் அறியாத மானிடரை *
    வையம் சுமப்பதும் வம்பு *

திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே *
    திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே *
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே *
    பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னானாள் வாழியே **
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே *
    உயரரங்கர்கே கண்ணி யுகந்தளித்தாள் வாழியே *
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே *
    வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே *

**மணவாள மாமுனிகள் (பெரிய ஜீயர்)**

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே |

ஸ்ரீரங்க வாஸிநே பூயாத் நித்யஸ்ரீர் நித்யமங்களம் ||

**வேங்கடகுரவே நம:**
**அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்**
**ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

---